05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் மூலம் படிவம் 1 மாணவர்களின் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN MENJAWAB SOALAN ARAS TINGGI DALAM BAHAGIAN PEMAHAMAN DI KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN TEORI PEMBELAJARAN BERASASKAN INKUIRI

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கோகிலவாணி த/பெ சிவகுமார்
KOKILAVANI A/P SIVAKUMAR

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் மூலம் படிவம் 1 மாணவர்களின் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN MENJAWAB SOALAN ARAS TINGGI DALAM BAHAGIAN PEMAHAMAN DI KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN TEORI PEMBELAJARAN BERASASKAN INKUIRI

கோகிலவாணி சிவகுமார்

KOKILAVANI A/P SIVAKUMAR

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வு தமிழ்மொழிக் கல்வியியலில் இளங்கலைப் பட்டத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது

LATIHAN ILMIAH INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN

தமிழ்மொழிப்பிரிவு நவீன மொழித்துறை

மொழி தொடர்பியல் புலம்

சுல்தான் இடரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

PROGRAM BAHASA TAMIL, JABATAN BAHASA MODEN FAKULTI BAHASA DAN KOMUNIKASI UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**படைப்புரிமை உறுதிமொழி**

PERAKUAN KEASLIAN PENULISAN

இந்த உறுதிமொழி 12ஆம் திகதி ஜனவரி மாதம் 2023 அன்று வழங்கப்பட்டது . Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas.

**i.மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar):**

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் மூலம் படிவம் 1 மாணவர்களின் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல் எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வேடு என்னுடைய சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழி தொடர்பியல் புலத்தின் மாணவியாகிய நான் கோகிலவாணி சிவகுமார் (D20191089921) உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில் பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணைபுரிந்த அனைத்து மேற்கோள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

Saya, **KOKILAVANI A/P SIVAKUMAR (D20191089921)** FAKULTI BAHASA DAN KOMUNIKASI dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MENJAWAB SOALAN ARAS TINGGI DALAM BAHAGIAN PEMAHAMAN DI KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN TEORI PEMBELAJARAN BERASASKAN INKUIRI** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

______________________________

மாணவர் கையொப்பம் / Tanda tangan pelajar

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**ii. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Ponyella):**

விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் மூலம் படிவம் 1 மாணவர்களின் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல் என்ற தலைப்பிலான இந்த ஆய்வேடு கோகிலவாணி சிவகுமார் (D20191089921) என்ற மாணவரின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், திரு.முனீஸ்வரன் குமார் உறுதிமொழி வழங்குகின்றேன் இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப்பட்டத்தைப் பெறுவதற்காக மொழி தொடர்பியல் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Saya, **ENCIK. MUNIISVARAN KUMAR** dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MENJAWAB SOALAN ARAS TINGGI DALAM BAHAGIAN PEMAHAMAN DI KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN TEORI PEMBELAJARAN BERASASKAN INKUIRI** dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada FAKULTI BAHASA DAN KOMUNIKASI bagi memenuhi sebahagian syarat untuk memperoleh IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN.

________________________ ________________________

நாள்/ Tarikh

நெறியாளர் கையொப்பம்/ Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**நன்றியுரை**

இந்த ஆய்வினை செவ்வனே முடித்ததில் நான் பல நல்லுள்ளங்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். முதலாவதாக, இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு வாய்ப்பளித்த சுல்தான் இட்ரீஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமின்றி, இந்த ஆய்வின் தொடக்கத்தில் இருந்து இறுதிவரை ஆய்வாளருக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்த முனைவர் முனீஸ்வரன் குமார் அவர்களுக்கும், முனைவர் கிங்ஸ்டன் பால்தம்புராஜ் அவர்களுக்கும், எனது நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். இந்த ஆய்வினை செய்து முடிக்க துணைப்புரிந்த பிற விரிவுரையாளர்களுக்கும் இத்தருணத்தில் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

தொடர்ந்து, இந்த ஆய்வினை மேற்கொள்ள துணையாக இருந்த கிள்ளானில் அமைந்திருக்கும் இடைநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, இந்த ஆய்வினை செய்து முடித்த இத்தருணத்தில் எனக்கு கல்வியறிவைச் செறிவோடு ஊட்டிய இறைவனுக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், தமிழ்த்தாயின் பொற்பாதம் போற்றி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வுச் சாரம்

இந்த ஆய்வு விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் மூலம் படிவம் 1 மாணவர்களின் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வானது மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டு கையாளப்பட்டுள்ளது. அவை, படிவம் 1 மாணவர்கள் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்நோக்கும் சிக்கலைக் கண்டறிதல், சிக்கலுக்கான காரணங்களைக் கண்டறிதல் மற்றும் விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் மூலம் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனையை மேம்படுத்துதல் ஆகும். இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு ஆய்வாளர் பண்புசார் அணுகுமுறையைக் கையாண்டுள்ளார். அதோடு, விசாரணை வழி கற்றல் கோட்பாட்டினைக் கொண்டு நடவடிக்கைகளை ஆய்வாளர் திட்டமிட்டுள்ளார். இந்த ஆய்வில் கிள்ளானில் அமைந்திருக்கும் இடைநிலைப்பள்ளியின் மாணவர்களும் ஆசிரியர்களும் உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆய்வின் வழி மாணவர்கள் கேள்விகளைப் புரிந்துக் கொள்வதில் சிக்கல், புள்ளிகளுக்கு ஏற்ற பதில்கள் அளிக்க இயலவில்லை, கருத்துக்களின் எண்ணிக்கையில் குழப்பம் மற்றும் நாட்டமின்மை போன்ற சிக்கலையும் குறைவான வாசிப்பு பழக்கம், பொது அறிவு சார்ந்த தகவல்களை அறிந்துக் கொள்வதில் குறைவான நாட்டம், வகுப்பில் அதிகமாக ஆசிரியர் மைய கல்வி முறையை அமல்படுத்துதல், கேள்வி திருத்தும் முறை அறியாமை மற்றும் அலட்சியமும் மெத்தனப் போக்கு எனும் சிக்கலுக்கான காரணங்களும் கண்டறியப்பட்டுள்ளது. விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களின் கருத்துணர் பகுதியில் உயர்நிலைச் சிந்தனைத் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## Abstrak

Kajian ini dijalankan berdasarkan tajuk meningkatkan kemahiran berfikir aras tinggi dalam soalan pemahaman pelajar tingkatan 1 melalui teori pembelajaran inkuiri. Kajian ini mempunyai tiga objektif utama. Antarannya ialah mengenal pasti masalah yang dihadapi oleh pelajar Tingkatan 1 dalam menjawab soalan pemikiran aras tinggi mengenal pasti punca masalah dan cara mengembangkan pemikiran aras tinggi dalam soalan pemahaman melalui teori pembelajaran inkuiri. Pengkaji telah menggunakan pendekatan kualitatif untuk melaksanakan kajian ini. Selain itu, pengkaji merancang aktiviti berdasarkan teori pembelajaran inkuiri. Pelajar dan guru Sekolah Menengah yang terletak di daerah Klang terlibat dalam kajian ini. Melalui kajian ini, pelajar sukar memahami soalan, tidak dapat memberikan jawapan yang sesuai, kekeliruan dan kurang minat terhadap konteks, kurang tabiat membaca, kurang minat mempelajari maklumat pengetahuan am, pelaksanaan pembelajaran berpusatkan guru dalam kelas dan kemalasan pelajar. Aktiviti berdasarkan teori pembelajaran inkuiri telah dijalankan dan kemahiran berfikir aras tinggi pelajar telah dipertingkatkan melalui kajian ini.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| படைப்புரிமை உறுதிமொழி | i |
| நன்றியுரை | ii |
| ஆய்வுச்சாரம் | iii |
| பொருளடக்கம் | vi |
| அட்டவணைப் பட்டியல் | viii |
| குறிவரைவுப் பட்டியல் | ix |
| வரைபடப் பட்டியல் | x |
| இயல் 1 அறிமுகம் | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 6 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 7 |
| 1.5 ஆய்வு வினா | 8 |
| 1.6 ஆய்வு நன்மைகள் | 8 |
| 1.7 ஆய்வு எல்லை | 9 |
| 1.8 ஆய்வச் சான்றாதாரம் | 10 |
| 1.9 கலைச்சொற்கள் | 11 |
| 1.10 தொகுப்புரை | 14 |
| இயல் 2 ஆய்விலக்கிய மீள்நோக்கு | |
| 2.1 முன்னுரை | 15 |
| 2.2 முந்தைய ஆய்வுகள் | 16 |
| 2.3 ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பின் விவாதம் | 23 |
| 2.4 தொகுப்புரை | 27 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



இயல் 3 ஆய்வு நெறிமுறை

| | |
|---|---|
| 3.1 முன்னுரை | 28 |
| 3.2 ஆய்வு வடிவமைப்பு | 29 |
| 3.3 ஆய்வுக் கட்டமைவு | 31 |
| 3.4 ஆய்வு அணுகுமுறை | 32 |
| 3.5 ஆய்வு உட்படுத்தப்பட்டோர் | 33 |
| 3.6 ஆய்வுக் கருவி | 34 |
| 3.7 தரவு சேகரிப்பு முறை | 37 |
| 3.8 தரவு பகுப்பாய்வு முறை | 39 |
| 3.9 ஆய்வுக் கோட்பாடு | 41 |
| 3.10 தொகுப்புரை | 43 |

இயல் 4 தரவு பகுப்பாய்வு

| | |
|---|---|
| 4.1 முன்னுரை | 44 |
| 4.2 ஆய்வு முடிவு : வினா 1 | 44 |
| 4.3 ஆய்வு முடிவு : வினா 2 | 49 |
| 4.4 ஆய்வு முடிவு : வினா 3 | 53 |
| 4.5 தொகுப்புரை | 61 |

இயல் 5 ஆய்வுக் கண்டுபிடிப்பு

| | |
|---|---|
| 5.1 முன்னுரை | 62 |
| 5.2 ஆய்வுக் கருத்துரை : வினா 1 | 62 |
| 5.3 ஆய்வுக் கருத்துரை : வினா 2 | 63 |
| 5.4 ஆய்வுக் கருத்துரை : வினா 3 | 65 |
| 5.5 தொடர் ஆய்வுக்களுக்கான பரிந்துரைகள் | 67 |
| 5.6 தொகுப்புரை | 68 |

| | |
|---|---|
| துணைநூற்பட்டியல் | 69 |
| பின்னிணைப்பு | 72 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்


3.1 கருத்தறிவினா பாரம் 35

3.2 நேர்காணல் வினாத்தொகுதி பகுதிகள் 36

3.3 மதிப்பீட்டு தாள் பகுதிகள் 37

3.4 கால வரையறை 39

3.5 புள்ளி பகுப்பு முறை 40

4.1 நடவடிக்கையின் மதிப்பீடு 59


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**குறிவரைவுப் பட்டியல்**

4.1 முன்னறி தேர்வில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் 45

4.2 கருத்தறிவினா வழி கிடைக்கப்பட்ட தரவுகள் 47

4.3 முன்னறி மற்றும் பின்னறி தேர்வு 60

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**வரைபடப் பட்டியல்**

2.1 ஆய்வுப் பொருள் கட்டமைப்பு வரைப்படம் 26

3.1 ஆய்வு வடிவமைப்பு 29

3.2 ஆய்வுக் கட்டமைவு 31

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

இன்றைய நவீன உலகத்தில் அனைத்து துறைகளும் பல மாற்றங்களைத் தன்னுள் உள்வாங்கிக் கொண்டு வருகின்றது. அவ்வகையில் மலேசிய கல்வித்துறையும் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றவாறு வளர்ச்சிக் கண்டுள்ளது. அதன் கொள்கைகளையும் திட்டங்களையும் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்குத் தகுந்தாற் போல் கல்வியாளர்கள் சீரமைத்து வழங்கி வருகின்றனர். அவ்வகையில், 6.9.2011ஆம் நாளன்று மலேசியக் கல்வி மேம்பாட்டு திட்டமானது தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (ஹனித்தாலிடியா & குமாரன், 2019).

இந்தக் கல்வி மேம்பாட்டின் வழி அறிவாற்றல் மற்றும் சிந்தனைத்திறன்மிக்க மாணவர்களை உருவாக்க வேண்டும் என்பது மிக முக்கியமான நோக்கமாகத் திகழ்கின்றது. சிந்தனைத் திறன் என்பது கல்வித் துறையில் நிச்சயம் இருக்க வேண்டிய அடிப்படை கூறாகும். மேலும், மனிதனின் செம்மைப்பட்ட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக சிந்தனைத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திறன் திகழ்கின்றது. தொடர்ந்து, சிந்தனைத் திறன் என்பது பல்வேறு கூறுகளைக் கொண்டுள்ளது. உயர்நிலைச் சிந்தனைத் திறன், ஆக்கச் சிந்தனை, ஆய்வுச் சிந்தனை போன்றவை சிந்தனைத் திறன் அடிப்படையின் கீழ் அமைந்தவையாகும். அவ்வாறு, மேம்படுத்தப்பட்ட இந்தக் கல்வி திட்டத்தில் உயர்நிலைச் சிந்தனை திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு மாணவர்களின் கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவது மட்டுமின்றி, கற்றல் கற்பித்தலில் அவர்களது உயர்நிலைச் சிந்தனையை மேம்படுத்தப் பல வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பூளும் கோட்பாடு (1956) மாணவர்கள் உயர்நிலைச் சிந்தனைத் திறனைக் கொண்டிருப்பது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளது. அதை உறுதி செய்யும் வகையில் பாடப் புத்தகங்களிலும் தேர்வுத் தாள்களிலும் உயர்நிலைச் சிந்தனை திறன் பயன்பாட்டைக் காண முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வில் இயல் 1 என்பது முக்கிய அடித்தளமாகக் கருதப்படுகின்றது. இயல் ஒன்றானது ஆய்வை அறிமுகம் செய்யும் வண்ணம் அமைக்கப்படுள்ளது. இதில் 9 துணைத்தலைப்புகள் உள்ளடங்கியுள்ளது. அவை ஆய்வுப் பின்னணி, ஆய்வச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரம், கலைச் சொற்கள் மற்றும் தொகுப்புரையாகும்.

### 1.2 ஆய்வுப் பின்னணி

சிறந்த கல்வி திட்டம் என்பது ஒரு நாட்டின் அடித்தளமாகக் கருதப்படுகின்றது. முறையான கல்வி திட்டங்களையும் கொள்கைகளையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொண்ட நாட்டின் பொருளாதாரம், அரசியல், மக்களின் வாழ்வாதாரத்தை எளிமையாக மேம்படுத்த இயலும். அவ்வகையில் கல்வி என்பது ஒரு தலைச் சிறந்த மனிதனை உருவாக்க பயன்படுத்தப்படும் ஒரு வழிக்காட்டி என்று மேல்நாட்டு அறிஞரான Plato குறிப்பிடுகின்றார் (Swift, 2017). அவ்வாறான கல்வியை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பொழுது முறையான வகுக்கப்பட்ட திட்டங்களாக வழங்க வேண்டும். அதன் அடிப்படையில் மலேசியக் கல்வி திட்டமும் கல்வியாளர்களின் வழிக்காட்டலின் துணைக்கொண்டு வரையருக்கப்பட்டுள்ளது.

மலேசியக் தேசியக் கலைத்திட்டம் என்பது அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை என்பனவற்றை உள்ளடக்கிய கலைத்திட்ட மற்றும் புறப்பாட நடவடிக்கைக்கான கல்வித்திட்டமாகும். இத்திட்டம் மாணவர்கள் உடல், ஆன்மிகம், அறிவு, உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகக் பெற்றிருப்பதற்கு வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும், அவர்கள் சிறந்த அறிவற்றாலைப் பெறவும் வழி வகுக்கின்றது (தேசியக் கலைத்திட்டம், 1997). அவ்வகையில் மலேசிய நாட்டின் தேசியக் கலைத்திட்டத்திற்கு ஏற்ப தமிழ்மொழி பாடம் ஆரம்பப்பள்ளி தொடங்கி மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து, இடைநிலைப்பள்ளியிலும் மாணவர்களுக்குத் தேர்வு பாடமாகத் தமிழ்மொழி பாடம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழி பாடக் கலைத்திட்டம் ஆரம்பப்பள்ளியின் வளர்ச்சியாகக் கருதப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மலேசியக் கல்வி மேம்பாட்டு திட்டம் 2013-2025 அடிப்படையாகக் கொண்டு இடைநிலைப்பள்ளியின் KSSM திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் முக்கிய ஆறு கூறுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவை, அறிவு, சிந்தனை திறன், தலைமைத்துவத் திறன், இருமொழி ஆற்றல், பண்பும் ஆன்மீகமும், தேசிய அடையாளம் என்பனவையாகும். இதில் முக்கிய கூறான சிந்தனை திறனில் முக்கிய பங்கினை வகிப்பது உயர்நிலைச் சிந்தனை திறனாகும். 'Kemahiran Berfikir Aras Tinggi (KBAT) 2013' என்பது கல்வி அமைச்சால் கல்வி மேம்பாட்டு திட்டத்தில் அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உயர்நிலைச் சிந்தனை என்பது குறிப்பிட்ட தகவல்களைப் பகுத்தாராய்ந்து, தொகுத்தாய்ந்து, மதிப்பீடு செய்து தகுந்த சான்றுகளுடன் விவரித்துக் கூறுவதாகும். கிடைத்த கருத்துக்களை தன்னுடைய முன்னறிவிற்கு ஏற்றவாறு தொடர்புப்படுத்தி ஏற்புடைய எடுத்துக்காட்டுகளுடன் விவாதித்துக் கூறுவதும் உயர்நிலைச் சிந்தனைத் திறனின் கீழ் அடங்கும். உயர்நிலைச் சிந்தனைத் திறன் என்பது புதிதான ஒன்றல்ல மாறாக நமக்கு நன்கு அறிமுகமான ஆக்கச் சிந்தனை, ஆய்வுச் சிந்தனை, சிக்கலைக் களைதல், சிந்தனை மீட்சி, கருத்து உருவாக்கல் போன்ற சிந்தனைகளை உள்ளடக்கியதாகும் (சரஸ்வதி,2014). அவ்வகையில் உயர்நிலைச் சிந்தனையை மாணவர்களிடத்தில் பயன்படுத்துவதற்கான பல முக்கிய காரணங்களைக் கல்வி அமைச்சு முன் வைத்துள்ளது. அதில், நாட்டின் தூர நோக்குச் சிந்தனையின் அடிப்படையில் ஒரு சிறந்த, புத்தாக்கச் சிந்தனை, விவேகச் சிந்தனை, ஆக்கச் சிந்தனையுடைய மாணவர்களை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உயர்நிலைச் சிந்தனை என்பது ஒரு மாணவனை, ஒரு குறிப்பிட்ட கருத்தினை பல்வேறு சூழலில் சிந்திக்க செய்து அதற்கேற்ப துலங்க செய்வதாகும். மாணவர்களிடையே பரந்த சிந்தனை இருந்தால் மட்டுமே அவர்களால் எந்தவொரு சிக்களையும் களைய இயலும் என்பதற்காகவே உயர்நிலைச் சிந்தனைக்கு அதிகம் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. மேலும், ஆய்வுப்பூர்வமாக சிந்திப்பதன் வழி மாணவர்கள் தவறு செய்வதிலிருந்து தவிர்க்கப்படுவர் என்பதால் கல்வி அமைச்சு உயர்நிலைச் சிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது ( மலேசியக் கல்வி அமைச்சு, 2013). இதனைச் செயல்படுத்தும் வகையில் மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களிலும் தேர்வுத் தாள்களிலும் உயர்நிலைச் சிந்தனை திறனை வளர்க்கும் வகையில் கேள்விகள் வழங்கப்பட்டு வருகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மாணவர்களுக்கு வழங்கப்படும் கேள்விகள் யாவும் பூளும் கோட்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது. அதிலும் குறிப்பாக வாசித்து கருத்துணர் எனும் கற்றல் தரத்தில் உயர்நிலை சிந்தனை கேள்விகள் அதிகம் கேட்கப்படுகின்றன. ஆனால், வாசித்து கருத்துணர் கேள்விகளில் கேட்கப்படும் உயர்நிலைச் சிந்தனை கேள்விகளை மாணவர்கள் கையாளுவதில் அதிக சிக்கலை எதிர்நோக்குகின்றனர். ஆகையால், இந்த ஆய்வு வாசித்து கருத்துணர் பகுதியில் கேட்கப்படும் உயர்நிலைச் சிந்தனை கேள்விகளில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கலைக் கண்டறியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**1.3 ஆய்வுச் சிக்கல்**

மலேசியக் கல்வி மேம்பாட்டு கலைத்திட்டத்தில் உயர்நிலை சிந்தனை திறன் என்பது முக்கிய கூறாக அமைகின்றது. அதன் அடிப்படையில் பாடப்புத்தகங்களிலும் தேர்வுத் தாள்களிலும் உயர்நிலைச் சிந்தனை திறன் கேள்விகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக, வாசித்து கருத்துணர்தல் எனும் பகுதியில் இறுதி கேள்வியாக உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளை வழங்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு வழங்கப்படும் கேள்விகளைப் பதிலளிப்பதில் மாணவர்கள் அதிகம் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனை ஆய்வாளர் இந்த ஆய்வின் முக்கிய சிக்கலாகக் கருதுகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வாசித்து கருத்துணர்தல் எனும் பகுதியில் வாசிப்பு பனுவலில் இருந்து மாணவர்கள் பதில்களை அடையாளம் கண்டு எளிமையாக எழுத முடிகின்றது. ஆனால், வாசிப்பு பகுதிக்கு ஏற்றார் போல் கேட்கப்படும் உயர்நிலைச் சிந்தனை கேள்விகளுக்கு பதிலளிப்பதில் சிக்கலை எதிர்கொள்கின்றனர். அதுமட்டுமல்லாமல், மதிப்பெண் புள்ளி அடிப்படையில் பார்த்தாலும் சில மாறுபாடுகள் தென்படுகின்றன. மற்ற கேள்விகளைக் காட்டிலும் உயர்நிலைச் சிந்தனை கேள்விகளுக்கு மாணவர்கள் குறைந்த மதிப்பெண்களைப் பெறுகின்றனர். ஆகையால், இவ்வாறு சிக்கலை எதிர்நோக்கும் மாணவர்களின் உயர்நிலை சிந்தனை திறனை வளப்படுத்துவதே இந்த ஆய்வை ஆய்வாளர் மேற்கொள்வதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.4 ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு ஆய்வாளர் முக்கிய நோக்கங்களை அடையாளம் கண்டுள்ளார். அவை மூன்று முக்கிய நோக்கங்களை உள்ளடக்கியுள்ளது. அவை யாதெனில்,

I. படிவம் 1 மாணவர்கள் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்நோக்கும் சிக்கலைக் கண்டறிதல்.

II. படிவம் 1 மாணவர்கள் கருத்துணர் கேள்விகளில் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்நோக்கும் சிக்கலுக்கான காரணங்களைக் கண்டறிதல்.

III. விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் வழி கருத்துணர் கேள்விகளில் மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு வினா

ஆய்வு நோக்கங்களுக்கு ஏற்றவாறு ஆய்வு வினாக்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் இந்த ஆய்வு மூன்று வினாக்களுக்குப் பதிலளிப்பதைக் கருத்தில் கொண்டுள்ளது. அவை,

I. படிவம் 1 மாணவர்கள் கருத்துணர் பகுதிகளில் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் யாவை?

II. படிவம் 1 மாணவர்கள் கருத்துணர் பகுதிகளில் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்நோக்கும் சிக்கலுக்கான காரணங்கள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


III. விசாரணை வழி கற்றல் கோட்பாட்டின் மூலம் கருத்துணர் பகுதிகளில் மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனை திறனை எவ்வாறு மேம்படுத்துதல்?

**1.6 ஆய்வு நன்மைகள்**

இந்த ஆய்வு மாணவர்கள் கருத்துணர் பகுதிகளில் காணப்படும் உயர்நிலைச் சிந்தனை திறன் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்நோக்கும் சிக்கலை அடையாளம் கண்டு அதனை மேம்படுத்த கையாளப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் கருத்துணர் பகுதிகளில் உயர்நிலைச் சிந்தனை திறன் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கலைந்து சிறந்த முறையில் பதிலளிக்க முடியும். மேலும், சமுதாயத்தில் சிக்கல்களை விவேகமாக கையாளும் ஆற்றல்மிக்க மாணவர்களை இந்த ஆய்வின் வழி உருவாக்க நேரிடும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, இந்த ஆய்வை மேற்கொள்வதன் வழி மாணவர்களுக்கு வழிக்காட்டியாக இருக்கும் ஆசிரியர்களும் பயன் பெற முடியும். கருத்துணர் பகுதியில் உயர்நிலைச் சிந்தனை கேள்விகளைப் பதிலளிக்கும் பொழுது எவ்வாறான சிக்கலை மாணவர்கள் எதிர்கொள்கின்றனர் என்பதனை ஆசிரியர்கள் ஆழமானப் புரிதலை ஏற்படுத்திக் கொள்ள இயலும். மேலும், இவ்வாறு சிக்கலை எதிர்கொள்ளும் மாணவர்களை கையாளும் வழிமுறையையும் இந்த ஆய்வின் வழி ஆசிரியர்கள் உள்வாங்கிக் கொள்ள இயலும். இவ்வாறு செய்வதன் வழி ஒரு முழு செயல்திறன் மிக்க மாணவர்களை இந்தச் சமுதயாத்திற்கும் நாட்டிற்கும் வழங்க இயலும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அடுத்து, கல்வி அமைச்சும் ஆய்வாளரின் இந்த ஆய்வின் வழி சில நன்மைகளை அடையக்கூடும். அவை யாதெனில் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் உயர்நிலைச் சிந்தனை கேள்விகளைப் பதிலளிப்பதில் மாணவர்கள் எத்தகைய சிக்கலை எதிர்கொள்கின்றனர் என்பதனை அறிந்துக் கொள்ள இயலும். இதன் வழி வருங்காலங்களில் ஆரம்பப்பள்ளியிலே மாணவர்களின் உயர்தரச் சிந்தனைத் திறனை வளப்படுத்த ஏதுவாக இருக்கும். அதைச் சார்ந்த திட்டங்களை வழிவகுக்கவும் உறுதுணையாக இந்த ஆய்வு அமையும். மேலும், இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அணுகுமுறையின் வழி வேறு மொழி பாடத்திட்டங்களிலும் உயர்நிலைச் சிந்தனைத் திறன் கேள்விகளை மாணவர்களை மேம்படுத்த துணைப்புரியும். ஆகையால், இவை யாவும் கல்வி அமைச்சு இந்த ஆய்வின் வழி கிடைக்கப்பெறும் நன்மைகள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7 ஆய்வு எல்லை

இந்த ஆய்வு கருத்துணர் பகுதிகளில் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளைப் பதிலளிப்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கலைக் கண்டறிந்து அதனை மேம்படுத்தும் அணுகுமுறையை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வினை ஆய்வாளர் கள ஆய்வாக மேற்கொண்டுள்ளார். அதோடு, இந்த ஆய்வில் பண்புசார் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னறி தேர்வு, கருத்தறி வினா, நேர்காணல், பின்னறி தேர்வு வழியாக இந்த ஆய்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டு இதில் உட்படுத்தப்பட்டது. ஆய்வுத் தளமாக சிலாங்கூர் மாநிலத்தில் கிள்ளான்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வட்டாரத்திலுள்ள ஓர் இடைநிலைப்பள்ளியின் முதலாம் படிவம் மாணவர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

21ஆம் நூற்றாண்டில் மாணவர்கள் கட்டாயம் கைத்தேர்ந்து இருக்க வேண்டிய திறன்களுள் ஒன்றான உயர்நிலைச் சிந்தனை திறன் மட்டும் தான் இந்த ஆய்வில் உட்படுத்தப்பட்டது. இதில் மாணவர்களுக்கு வாசித்து கருத்துணர் பகுதிகளும் கேள்விகளும் அவர்களின் அடைவுநிலையைக் கண்டறிவதற்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் கேட்கப்படும் உயர்தரச் சிந்தனை கேள்விகள் யாவும் புளும் கோட்பாட்டின் 4 படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். அவை பயன்படுத்துதல், பகுத்தாய்தல், தொகுத்தல் மற்றும் மதிப்பீடுதல் ஆகும். இந்தப் படிநிலைகளின் துணைக் கொண்டு கருத்துணர் கேள்விகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதோடு, மாணவர்கள் உயர்நிலைச் சிந்தனைத் திறன் கேள்விகளைப் பதிலளிப்பதில் எதிர்நோக்கும் சிக்கலைக் களைய விசாரணை வழி கற்றல் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு ஆகஸ்ட் மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் வரை மாணவர்களிடத்தில் நிகழ்த்தப்பட்டது. இவை தான் ஆய்வாளர் இந்த ஆய்வில் கொண்டிருக்கும் ஆய்வு எல்லைகளாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

இந்த ஆய்வை முறையாக மேற்கொள்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, இதில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சான்றாதாரங்களாக விளக்கப்பட்டுள்ளன. திரட்டப்பட்ட சான்றாதாராங்களுக்கு ஏற்ப இந்த ஆய்வு முடிவுகள் அமைந்துள்ளன.

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

இந்த ஆய்வில் முதன்மை சான்றாதாரமாக முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு, கருத்தறிவினா போன்றவைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் இவ்வாய்வின் முதன்மைச் சான்றாதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.8.2 துணைமைச் சான்றாதாரம்

இந்த ஆய்வின் தலைப்பு தொடர்பான ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள், கட்டுரைகள், புத்தகங்கள் இவ்வாய்விற்கு துணைமைச் சான்றாதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றைக் கொண்டு இந்த ஆய்வானது செயல்படுத்தப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.9 கலைச்சொற்கள்

இந்த ஆய்வு முழுவதும் சில கலைச்சொற்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. அவை, கருத்துணர் கேள்வியும் உயர்நிலைச் சிந்தனை திறனும் ஆகும்.

### 1.9.1 கருத்துணர் கேள்வி

வாசிப்பு திறனில் மிக முக்கிய கூறாக விளங்குவது கருத்துணர் பகுதியாகும். கருத்துணர் என்பது சிறிய கூறுகளாகப் பிரிக்கப்படும் ஒரு திறனாகும் (Nila Banton Smith, 1969). கருத்துணர் பகுதியின் கீழ் சில

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உட்பிரிவுகள் அல்லது வகைகள் உள்ளன. அவை, நேரடிக் கருத்துணர், விளக்கக் கருத்துணர், திறனாய்வு கருத்துணர் மற்றும் படைப்பாற்றல் கருத்துணர்தல் எனும் நான்கு வகைகளாக கருத்துணர் பிரிக்கப்பட்டு வகுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, கருத்துணர் என்பது பேசும் அல்லது எழுதப்பட்ட மொழியின் பொருளைப் புரிந்து கொள்வதற்கான ஒரு கடினமான மன செயல்முறையாகக் கருதப்படுகின்றது. ஒரு மாணவனின் மன செயல்முறையை ஆசிரியர் அறிந்துக் கொள்வது கடினமாகும். ஆகையால், அவர்களின் புரிந்துணர்வை உறுதி செய்து கொள்வதற்கு பல நடவடிக்கைகளையும் மதிப்பீடு வழியாகவும் தெரிந்துக் கொள்ள இயலும். அடுத்து, கருத்துணர் பகுதியின் முக்கியமான கூறு சொற்கள் என்றில்லாமல் சொற்றொடர்கள் மற்றும் வாக்கியங்களாகும் (Klare,1976). இதில் கருத்துணர் பகுதி நான்கு படிநிலைகளைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை யாதெனில் புரிதல் நிலை, கடின நிலை, பத்தி நிலை மற்றும் மாணவர்களின் அனுபவத்தின் அடிப்படையாகும். மேலும், கருத்துணர் கேள்வி என்பது வாசிப்பு பனுவலில் உள்ள தகவல்களைப் புரிந்துக் கொள்ளவும் முக்கிய தகவல்களைப் சேகரிக்கவும் உதவும் ஒரு முக்கிய கூறாகும் (மகேஷ்வரி, 2017). இதனை மையமாகக் கொண்டு தான் வாசிப்பு பகுதியின் மாணவர்களின் புரிதல் நிலையை மதிப்பீடும் வண்ணம் கேள்விகள் வழங்கப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 உயர்நிலைச் சிந்தனைத் திறன்

இன்றைய அதிவேக விஞ்ஞான உலகில் தரமிக்க சிந்தனையாற்றலை வெளிப்படுத்தும் மனிதரை உருவாக்குவதில் அனைவரும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். அவ்வாறு உருவாகும் மனிதர்கள் சிக்கலை எளிதில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கலைவதோடு மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு சமுதாயத்தில் சிறப்பாக வாழ இயலும். ஆகவே, ஒரு தரமிக்க சிந்தனை ஆற்றலைக் கொண்ட மனிதனை உருவாக்குவதற்கு உயர்நிலைச் சிந்தனைத் திறன் மிக முக்கியமானதாக குறிப்பிடப்படுகின்றது. அறிவு, திறன், பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்து மீட்டுணர்தல் வழி சிக்கலைக் களைதல், முடிவெடுத்தல், புத்தாகச் சிந்தனையுடன் ஒன்றைப் புதிதாக உருவாக்குவதை உயர்நிலைச் சிந்தனை திறனாக கருதப்படுகின்றது (கல்வி மேம்பாட்டு திட்டம், 2013). மேலும், சூழ்நிலைகளுக்கு ஏற்ப புத்தாக்க முறையில் கருத்துகளை முன் வைப்பதும் உயர்நிலைச் சிந்தனை திறனின் முக்கிய வெளிப்பாடாக உள்ளது (Anderson & Krathwol, 2001). உயர்நிலைச் சிந்தனை திறனின் வழி மாணவர்களின் புத்தாக்க சிந்தனையும் தூண்டப்பட்டு வளப்படுத்தப்படும். அதுமட்டுமல்லாமல், மாணவர்கள் சிக்கலைச் சுய முயர்ச்சியில் களையவும் ஏராணமாகச் சிந்திக்கும் திறனையும் உயர்நிலைச் சிந்தனை திறன் வழி பெற இயலும். இந்த திறன்களைக் கொண்ட மாணவர்கள் தங்கள் சொந்த கருத்துக்கள் மற்றும் பார்வைகளுக்கு ஏற்ப காரணத்தையும் விளைவையும் ஒப்பிட்டு, வேறுபடுத்தி, ஒழுங்கமைக்க, வகைப்படுத்த மற்றும் அடையாளம் காண முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 தொகுப்புரை

இந்த இயல் ஆய்வை அறிமுகப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப் பின்னணியில் மலேசியக் கலைத்திட்டம், கல்வி மேம்பாட்டு திட்டம் மற்றும் உயர்நிலைச் சிந்தனை திறனைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் ஆய்வாளர் இந்த ஆய்வை மேற்கொள்வதற்கான சிக்கல்களும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


விவரிக்கப்பட்டுள்ளன. அதோடு, ஆய்வு நோக்கமும் வினாக்களும் வழங்கப்பட்டுள்ளது. இதனுடன் இந்த ஆய்வின் வழி கிடைக்கப்பெறும் நன்மைகளும் ஆய்வின் எல்லையும் உட்படுத்தப்பட்டுள்ளது. இறுதியாக, இந்த ஆய்வின் இரண்டு கலைச்சொற்களான கருத்துணர் கேள்வியும் உயர்நிலைச் சிந்தனை திறனும் விளக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi